ஸ்ரீ ராமஜெயம்.

ஸ்ரீராமர் தோத்திரமாலை

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

விளம்பரம்.

சாதகாலங்காரம்.

மூலமும் - உரையும்.

இச் சென்னையின்கண் முன்னோர்கள் அருளிச்செய்த பல சோதிட நூல்கள் உள்ளன. அவற்றுள் இரண்டொரு நூற்களே மிக்க பயன்படத்தக்கவைகளும், வரிசைக்கிரமமாகச் செய்யப்பட்டவையுமாகும். அப்படிப்பட்டவற்றுள் சாதகாலங்காரம் என்பதுஎன்று அதற்கு இதுவரைக்கும் உரையில்லாத பெருங்குறையை நோக்கிப் பலரும் என்னை வற்புறுத்தியபடியால் அதற்குத் தக்கவாறு உரையெழுதி பன்னிரண்டு பாகங்களும் நன்றாய் விளங்கும்படி விளக்கி அச்சிட்டிருக்கின்றோம். வேண்டியவர்கள் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை ரூபா 1 8 0

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீராமர் ஸ்தோத்திரமாலை.

பூதலத்தையோரடி யளந்தரூபமானபொற்
பாததாமரைச்சரண் பணிந்துபூசைசெய்குவேன்
மாதவகோவிந்தஅரி கேசவஅரிநாரணா
நாதகீதவேதமந்திர ராமராமராமனே. ௧

சூகரத்தின்வடிவெடுத்த சுந்தராசவுந்தரா
ஏகலோகநாயகா நீயெங்குமாய்நிறைந்தவா
மேகமாயளாவிநின்ற வேதஞானதேசிகா
நாகமீதில்மேவுகின்ற ராமராமராமனே. ௨

காரணாதாமோதரா கரியநீலவர்ணனே
பூரணாபயோதரா புராதனாநிராதனா
வாரணாதிமூலமென்ற போதுவந்தவாமனா
நாரணாயசோதைபுத்ர ராமராமராமனே. ௩

வீரசிம்மஉக்ரமுற்ற விஜயமீறதசரதன்
பாரில்மைந்தனாகவந்த பஞ்சவர்சகாயனே
பூரணாகிருபாகரா புதியதூணில்வந்துமுன்
நாரசிம்மரூபமான ராமராமராமனே. ௪

மாமனானகஞ்சனை வளைந்துகொண்டுவென்றவா
பூமியுண்டுமிழ்ந்தவா புகழ்ந்துபொன்னரங்கமே

வாமனனைசொரூபனனை வாசுதேவதேவனே
காமமாயிரம்படைத்த ராமராமராமனே. ரு

கோடிசூரியப்பிரகாச கொண்டல்மேகவண்ணனே
வாடிநொந்திடைந்திடாமல் வந்தருள்புரிந்தருள்
மேடியந்தகன்வெகுண்டு சீறிமோதியுன்னிடம்
நாடிவந்தபோதுகாரும் ராமராமராமனே. சா

பாவியென்றுபேர்கொடாதே பஞ்சபாதகங்களை
மேவிநூறுகுற்றமேசெய் தாலும்வந்தென் மெய்யினில்
காவலாகவேயிருந்து கருணைகொண்டுகாரையா
நாவினால்நிதந்துதிப்பேன் ராமராமராமனே எ

தந்திதான்முன்னோலமென்ற போதுவந்ததீதமாம்
வந்துகாத்ததன்றுபோல வந்துகாரப்பதெந்தனை
செந்திருமணாளனை ஸ்ரீனிவாசநாதனே
நந்திசேகரன்றரித்த ராமராமராமனே. அ

மச்சரூபராகவா வராகரூபராகவா
கொச்சைஆயருக்குகந்த குன்றெடுத்துநின்றவா
பச்சைஆலினில்துயின்ற பச்சைநீலவர்ணனே
ரட்சகாஸ்ரீராகவா ராமராமராமனே. கூ

தானஞ்செய்துமறிகிலேன் தவங்கள்செய்துமறிகிலேன்
ஆனவன்பரானபேர்க் கன்னமிட்டுமறிகிலேன் [ன்
தேனமர்ந்தமலர்கொண்டுன்னைச்சிந்தைசெய்துமறிகிலே
நானறிந்ததொன்றுமில்லை ராமராமராமனே. க0

கந்தன்மாதுலாவுயர்ந்த கருடகேகவாகனு
சொந்தடிமையிவனுமென்று சூட்சபாதநல்கியே
யிந்தவேளைவந்துரட்சி யேகலோகநாயகா
நந்தகேசவாமுகுந்த ராமராமராமனே. கக

இல்லறத்தின்மாய்கையாலே யேங்கினேன்மயங்கியே
புல்லறிவுகொண்டுயானும் போற்றியான்பணிந்திலேன்
அல்லலற்றகாயமென் றறிந்துவந்துயென்னுளே
நல்லறிவுதந்துரட்சி ராமராமராமனே. கஉ

சங்குசக்ரரூபமான சரூபசீவவாசகா
எங்குமாய்நிறைந்தவா யிலங்குமுந்நூல்மார்பனே
மங்குல்மேனியாயுலர்ந்த மகரகுண்டலாதிபா
ரெங்குநாயகாமுகுந்த ராமராமராமனே. கங

அம்புவேல்விழிமின்னார்கள் ஆசைதன்வலைக்குளே
இம்பசாகரத்தழுந்தி யெண்ணமற்றவஞ்சகன்
வம்புகோடிசெய்திடினும் மாயனேபொறுத்திடீர்
நம்பினேனானுன்னடிமை ராமராமராமனே கச

ஆழமீதினில்துயின்ற அச்சுதாமுன்னாதியில்
ஏழுமாமரத்தையன்று மெய்திராவணாதிகள்
மாளவேசரந்தொடுத்த மாயனேமகிழ்ந்துயென்
னாளும்நீயுகந்துகாரும் ராமராமராமனே. கரு

குற்றமென்பதுசெய்தாலுங் கூலைகள்செய்திருக்கினும்
பெற்றதாய்விகாதமுண்டோபிள்ளைஎன்றுகொஞ்சுங்கள்

ஆற்றதன்மையாவனோ னரியவேகுறைசெய்தாலுமென்
நற்றமிழ்க்குகந்துகாரும் ராமராமராமனே. கசு

களபவாசனைமிகுந்த கரியமேகவர்ணனே
துளபமாலிகைபுனைந்த சுருதிவேதநாயகா
உளமகிழ்ந்துகருணைகொண்டு உன்னடிமையென்றுதான்
நளினதாமரைப்பத ராமராமராமனே. கஎ

சிகரகோபுரஞ்சிறந்த செய்யவீதிசூழவே
மகரதோரணஞ்சிறப்ப வரிசைமண்டபங்களும்
பகரமுற்றகொடிகளும் பணிந்துதானயோத்திதன்
நகரவாசமாயிருந்த ராமராமராமனே. கஅ

வாசமாலிகைபுனைந்து மண்ணையுண்டவண்ணனே
கேசவாமுராரிதந்த கிருஷ்ணனேமனோகர
தாசனென்றுபாததாம ரைச்சரண்கொடுத்தருள்
ராசவெங்கடேசனான ராமராமராமனே. கசூ

கோவினிற்றுபின்றவா குருந்திலேறிநின்றவா
காலிகன்றுமேய்த்தவாமன் கஞ்சனைவதைத்தவா
சாலநான்முகனையுந் தன்னிலேபடைத்துமே
நாலுவேதமும்புகழ்ந்த ராமராமராமனே. உ0

தஞ்சமாவதேதுன்பாத தாமரைச்சரணனே
மிஞ்சவேறுதப்புமில்லை மேகநீலவண்ணனே
அஞ்சலஞ்சலென்றுகை யமர்த்தியாதரிப்பையோ
ரஞ்சிதப்பிரகாசனான ராமராமராமனே. உக

எண்ணுமம்பரானபே ரிடத்திருந்துவாவியே
புண்ணியநாமதேசிகா புவனரட்சகர்த்தனே
வண்ணனேலீலாவினோத வாசனேநின்மலரடி
நண்ணினேன்வைகுந்தமேவும் ராமராமராமனே. உஉ

விருந்துசெய்யவேணுமென்ற விதுரன்மனையிலேகியே
யிருந்துமாய்சையாகவில் லிரண்டுதுண்டமாக்கினாய்
பொருந்துமாயமோமயக்க புண்டரீகமாயனே
நருந்துளவமணிந்தரங்க ராமராமராமனே. உ௩

மாயவாமுன்பாரதப்போர் வந்துதோன்றும்நாளையில்
நேயமாயருச்சுனர்க்கு நின்றுதேர்ந்துர்ந்தவா
ஆயனேஅனந்தமான ஆதிலட்சுமியெனும்
நாயகிமணாளனான ராமராமராமனே. உ௪

சாடிசெய்துரியோதனன் சபையிலேதிரௌபதை
ஆடையென்றுரிக்தபோது ஆதிமூலமென்றிட
வாடிநொந்திடைந்துகூது மணியெடுத்துநட்டையில்
நாடியொன்றுலட்சமென்ற ராமராமராமனே. உ௫

கச்சிலேயெனச்சபித்த கலிசைசாபத்தையும்
உச்சிதமதாகயன் றுகந்துசாபநீக்கினாய்
அச்சானகிதன்னைமேவ ஆசைகொண்டுமிதிலையில்
நச்சிலேவளைத்துநின்ற ராமராமராமனே. உ௬

ஆவல்கொண்டுபாரிலே அலைந்துமேபலாதுநின்
சேவடிக்காளாய்வராத சென்மமென்னஜென்மமோ

பாவகாரியென்றெண்ணாமல் பாதுகாத்தருள்புரி
நாவலர்க்குபாய்சுமந்த ராமராமராமனே. ௨௭

ஏகவஸ்துவாகிநின்ற யெங்கரங்கநாயகா
சாகரத்தினிற்றுயின்ற சகஸ்திரநாமதேசிகா
ராமகர்ணாசவுந்தரா முராரிமோட்சகாரணா
காகவர்யனந்தகோக ராமராமராமனே. ௨௮

ஜானகிமணாளனே தரணியையோரடியுமாய்
வானமோடளாவினின்ற வராகாவதாரனே
நமோநமோநாராயணா முகுந்தனந்தகேசவா
ஞானதேசிகப்பிரதாப ராமராமராமனே ௨௯

வேறு.

செப்பியே உந்திபூத்தோன் செங்கண்மால் பாதம் போற்றி, முப்பதும் படித்தோர்கேட்டோர் முற்றிலும் எழுதினோர்க்கு, தப்பிலா வரங்கள்தந்து சந்ததிகளைபெற்றோங்க, இப்புவி தனிலேவாழ்ந்து எண்ணமற் றிருப்பர்தாமே. ௩0

ஸ்ரீராமர் தோத்திரமாலை,

முற்றிற்று.